**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் - 2024**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிறுவகத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 71 பந்தியின் பிரகாரம் ரூபா 21,945,953 தொகைக்கான இணைந்த கடன், நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என வேறுபடுத்தி வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர் காலத்தில் சரியான முறையில் வகைப்படுத்துவற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமங்களின் படி நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என வேறுபடுத்தி வெளிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | ஊழியர் நலன்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் பந்திகள் 141 (ஆ), (இ), (ஈ) மற்றும் (ங) படி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டியுள்ளவாறு இந்த நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்துதல் எதிர் காலத்தில் மேற்கொள்வேன். | கணக்கீட்டு நியமங்கள் படி ஊழியர் நலன்கள் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்தினால் 2015 மே – 2018 ஜுலை காலப் பகுதியில் பல்வேறு நபர்களுக்கு கட்டணம் அறவிடப்படாமல் விடுதி வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், வருமானங்களை இனங்காண்பதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவினால் 2019 ஆண்டின் போது நிறுவகத்திற்கு கிடைக்க வேண்டியவை என இனங்கண்டு அறவீடு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்த ரூபா 8,895,470 இற்கான தொகையொன்று வருமானம் என கணக்கீடு செய்து அவற்றை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு பத்திரம் ஒன்று சமர்ப்பித்து ரூபா 8,895,470 தொகையினை வருமானம் என கணக்கீடு செய்வதற்காக பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையின் படி நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 1.8 (iii) இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இனங் காணப்பட்ட வருமானத்தை கணக்கீடு செய்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 695,429 தொகைக்கான அட்டுறுச் செலவுகள் கணக்கீடு செய்திருக்காமையால் மீளாய்வாண்டின் செலவுகள் மற்றும் அட்டுறுச் செலவுகள் அந்தச் பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | ஆண்டிற்குரிய செலவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | நிறுவகத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்த ஆய்வுச் செயற்திட்டங்களுக்காக வெளி நிறுவனங்களில் இருந்து கிடைத்திருந்த மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,256,390 தொகைக்கான லெப்டொப் கணினிகள், டப்லட் மற்றும் துணைக் கருவிகள் 103 விடயங்கள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பொன்றின் மூலம் இந்தத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், பெறுமதிகள் மற்றும் விடயங்கள் என வெவ்வேறாக மீள்மதிப்பீட்டு அறிக்கையுடன் குறிப்பிட்ட தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிறுவகத்திற்கு கிடைத்து பயன்படுத்தப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,804,500 தொகை பெறுமதியான சொத்துக்கள் 2023 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தி அதற்காக ரூபா 302,350 தொகை பெறுமானத் தேய்வு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அந்தத் தவறினை சரி செய்திருக்காமையால் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் அந்த எண்ணிக்கையால் மிகையாகவும், திரண்ட நிதி குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். 2023 ஆண்டின் நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வுக் கொள்கை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத் தேய்வு கணிக்கப்பட்டிருந்தமையால் அதனை சரி செய்வதற்கு இவ்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்படாததுடன், நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வுக் கொள்கை இவ்வாண்டில் திருத்தப்பட்டது. | சரியான சொத்துக்கள் மற்றும் பெறுமானத் தேய்வுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2025 ஆண்டிற்குரிய ரூபா 327,110 இற்கான செலவொன்று மீளாய்வாண்டின் போது அட்டுறுச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் மிகை அந்தப் பெறுமதியினால் குறைவாகவும், செலுத்த வேண்டிய செலவுகள் அந்தப் பெறுமதியினால் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்கின்றேன். | ஆண்டிற்குரிய செலவுகள் மாத்திரம் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | ரூபா 2,971,456 தொகை பெறுமதியான புத்தக வெளியீடுகளில் பாரிய எண்ணிக்கையொன்று மீண்டும் பயன்படுத்த முடியாதவாறு அழிவடைந்து அல்லது நிறம் மாற்றமடைந்து உள்ளதென இனங்கண்டிருந்த போதிலும், குறிப்பிட்ட புத்தக இருப்பினை அகற்றுவதற்கு அல்லது அதற்காக தேவையான ஒதுக்கங்கள் மேற்கொள்ளாமல் நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | தற்போது அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்த முடியாத புத்தக இருப்பினை அகற்ற வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மீதி ரூபா 43,189,356 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் வெளிநாட்டுப் புலமை பரிசில் கடன்பட்டோர் மீதி ரூபா 17,915,464 தொகையாக காணப்பட்டது. இந்த வெளிநாட்டு புலமை பரிசில் கடன்பட்டோர் மீதியில் ரூபா 12,643,448 இற்கான தொகையொன்று 2002 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் மீதியொன்றாக இருந்ததுடன், இந்தத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், 2021 ஆண்டின் போது நிறுவகத்திற்கு அறிவிக்காமல் பல்கலைக்கழகமொன்றின் விரிவுரையாளர் பதவியொன்றிற்காக விலகிச் சென்றிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடன் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 5,272,016 இற்கான தொகை குறிப்பிட்ட உத்தியோகத்தரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக நிறுவகம் செயற்படுவதுடன், தற்போது பிணை முறியினை செலுத்தியிருக்காத 06 புலமை பரிசில்காரர்களுக்கு குறைவாக இருப்பதற்கான காரணம் கடந்த 05 ஆண்டுகளின் போது நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாகவே ஆகும். தற்போது மீதியாக உள்ள செலுத்தப்படாத 03 புலமைப் பரிசில் பிணைமுறியாளர்களின் தற்போதைய முகவரிகள் காணப்படாத போதிலும், நிறுவகத்தினால் அவர்களை தொடர்புகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதென அறிவிக்கின்றேன். | பெற வேண்டிய தொகைகளை உரிய தரப்பினர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலுத்த வேண்டிய ரூபா 2,158,880 இற்கான மீதி 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுவதுடன், இந்த மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு மிகையான கடன் கொடுத்தோர் மீதி ரூபா 2,324,342 தொகையாகும். அவை திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள், சிற்றுண்டிச்சாலை வைப்பு, சேவையை விட்டு விலகிய ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை, தடுத்து வைக்கப்பட்ட வைப்புக்கள், கடன் கொடுத்தோர், செலுத்த வேண்டிய பணிக்கொடைகள், தம்புள்ள பிரதேச செயலகம், செயற்திட்டத்திற்குரிய கடன்கொடுத்தோர் மீதி ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. | தீர்க்க வேண்டியவர்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் செயற்பாட்டுக் கைநூலின் அத்தியாயம் 03 இன் பிரிவு 3.4(ix) | பதில் கடமை நியமனம் ஒன்று வருடம் ஒன்றினை மிகைக்காத கால வரையறையொன்றுக்கு வரையறுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நிறுவகத்தில் கடமையாற்றும் 06 உத்தியோகத்தர்கள் பல வருட காலம் முதல் பதில் கடமையில் ஈடுபட்டமையக்காக ரூபா 2,063,343 தொகை சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | அப் பதவிகளுக்காக தகைமையுடையோர் சேர்த்துக்கொள்ளும் வரை உரிய அங்கீகாரம் ஆளுகை சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு அல்லது சரியான மீளாய்வு மேற்கொண்டு பதவியை ஒழித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியமைச்சின் மற்றும் திறைசேரிச் செயலாளரின் இலக்கம் நி.அ. 01/2015/01 இலக்கம் கொண்ட 2015 மே 15 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரிவு 7(ஆ) | சீனாவில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றிற்காக 2024 நவம்பர் 01 திகதி முதல் 14 திகதி வரை பங்குபற்றியமைக்காக இடைக்காலக் கொடுப்பனவிற்காக 375 அமெரிக்க டொலர்களுக்கு சமமான ரூபா 112,678 இற்கான முற்பணத் தொகையொன்று 15 நாட்கள் காலப் பகுதிக்காக செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றுவதற்காக சீனா அனுசரனை நிறுவனத்தினால் நாளாந்தச் செலவுக்காக ரூபா 84,000 இற்கு சமமான 2,100 யுவான் தொகை | ஆளுகை சபையின் அங்கீகாரத்தின் மீது 03 வருடங்கள் வரை பகுதிகளாக செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. எவ்வாறாயினும், எதிர் காலத்தில் எக் காரணத்தினாலும் இவ்வாறான சலுகைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டா | சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அவருக்கு உரிமையில்லாத ரூபா 84,000 தொகை நாட்டிற்கு வந்து ஒரு மாதத்தினுள் நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 403 ஆம் இலக்க ஆளுகை சபைக் கூட்டத்தில் 36 தவணைகளில் செலுத்துவதற்காக இந்த சுற்றறிக்கைக்கு முரணாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | து என குறிப்பிடுகின்றேன் . |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 381(1) இன் பிரகாரம் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கொன்று ஆரம்பிப்பதற்காக திறைசேறியின் அரச கணக்குத் திணைக்களத்திலிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், நிறுவகத்தினால் பேணிச் செல்லப்படுகின்ற 04 நடைமுறை வங்கிக் கணக்குகளுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் ஆரம்பம் முதல் இந்த 04 நடைமுறை வங்கிக் கணக்குகளும் காணப்படுகின்றதென வருடாந்த கணக்குப் பரிசோதனையின் போது அவதானிக்கப்படுகின்றன. இந்த 04 கணக்குகளையும் ஆரம்பிக்கப்படுவதற்காக திறைசேரியினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் தொடர்பாக ஆவணங்களை கண்டறிய முடியாமல் உள்ளது. இது தொடர்பாக எதிர் காலத்தில் திறைசேரியின் அறிவுரை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். | தேவைப்பாட்டினை மீண்டும் கவனம் செலுத்தி தேவையற்ற வங்கிக் கணக்கினை மூடி விடுவதற்கு அல்லது நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,199,158 இற்கான மிகையயொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 16,128,359 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதி விளைவுகளில் ரூபா 9,929,201 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்தப் பின்னடைவிற்கு ஊழியர் ஊதியச் செலவு அதிகரித்தல், வாகன திருத்தச் செலவு அதிகரித்தல், ஊழியர் அபிவிருத்திச் செலவு அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் மீளாய்வாண்டுடன் ஒப்பீடு செய்யும் போது அரச மானியங்கள் 18.7 சதவீதத்தினாலும், ஆய்வு மற்றும் பயிற்சிகளுக்கான மூலதன மானியம் 10.7 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்ததுடன், ஏனைய வருமானங்கள் 19.6 சதவீதத்தினாலும் மற்றும் ஆய்வுகள் மற்றும் பயிற்சி அலுவல்களுக்காக வேறு தரப்பினர்களிடம் கிடைத்த நிதியம் 43.2 சதவீதத்தினாலும் குறைந்திருந்தது. அதேபோல், ஆய்வுகள் மற்றும் பயற்சிச் செலவுகள் 4 சதவீதத்தினாலும், ஏனைய தரப்பினர்களுக்காக ஆய்வு மற்றும் பயிற்சிச் செலவுகள் 43.2 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்ததுடன், ஊழியர் ஊதியச் செலவு 21.6 சதவீதத்தினால் மற்றும் ஏனைய செலவுகள் 26.3 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமான மிகை விகிதாசாரம் 3.5 இனாலும் குறைந்திருந்ததுடன், நடைமுறை விகிதாசாரம் 0.72 இனாலும், திடீர் சொத்து விகிதாசாரம் 0.71 இனாலும் அதிகரித்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்திற்காக 2019 மே 27 திகதி 228 பேர்களைக் கொண்ட பதவியணியொன்று முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 13 பதவிகளுக்குரிய பதவியணிக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய பதவியணி மதிப்பீடொன்று முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அந்தப் பதவியணி மதிப்பீடு கிடைத்தவுடன் புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்று தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்று விரைவாக அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் படி அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக வருடாந்தம் வினைத்திறன் காண் பரீட்சை நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், நிறுவகத்தினால் 2019 ஆண்டின் பின்னர் வினைத்திறன் காண் பரீட்சை நடாத்தியிருக்கவில்லை. | வருடாந்த வினைத்திறன் காண் பரீட்சை தேவைப்பாட்டின் படி நடாத்துவதற்கு எதிர் காலத்தில் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் படி வினைத்திறன் காண் பரீட்சை நடாத்தப்பட வேண்டும். |

3.2 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உலக உணவு அமைப்பினால் 1984 ஆண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 600,000 தொகைக்கான லொரி வண்டியை கணக்கீடு செய்திருக்காததுடன், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை நிறுவகத்திற்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | 40 – 3933 நிறுவகத்திற்கு உரித்தாக்குவதற்காக உலக உணவு அமைப்பிற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்பினால் இலங்கை சுங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | வண்டியை உரித்தாக்க வேண்டும். |

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி ரூபா 13,130,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டு 13 ஆய்வுகள் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 2023 ஆண்டின் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த 16 | ஆய்வுகள் குறிப்பிட்ட காலத்தினுள் பூர்த்தி செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது ரூபா 11,610,000 தொகை செலவிடப்பட்டு 11 ஆய்வுகளும், 2025 ஆண்டு 02 ஆய்வுகளும் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும், ஆண்டின் போது ஒரு ஆய்வு மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன்படி, ஆய்வு செயற்திட்டங்கள் பூர்த்தி செய்வதன் மூன்னேற்றம் 09 சதவீதம் போன்ற குறைந்த பெறுமதியிலே காணப்பட்டது. மேலும், 2023 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 06 ஆய்வுச் செயற்திட்டங்கள் 2025 ஜூன் 30 திகதி அளவிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை. அதற்காக நிறுவகம் ரூபா 7,460,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. | ஆய்வுச் செயற்திட்டங்களின் 04 செயற்திட்டங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வுகள் மற்றும் பயிற்சிக் குழுவினால் அங்கீகரிக்கப்படாமல் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஆய்வுத் தலைப்பில் உட்படுத்தியிருந்த காரணத்தினால் 02 ஆய்வுத் தலைப்புக்கள் நிராகரிக்கப்படல், 02 ஆய்வுத் திட்டங்களின் விடயப் பரப்பு மாற்றப்பட்டு புதிய திட்டமொன்றென அங்கீகரிக்கப்படல், பாதீடு செய்யப்பட்ட செலவுகள் மாற்றத்திற்கு ஆளாகுதல், ஆய்வு மற்றும் பயிற்சிக் குழுவின் அங்கீகாரம் பெற்ற பின்னர் மீண்டும் செயல் நடவடிக்கைத் திட்டம் திருத்தப்படல், செயற்திட்டங்கள் குறிப்பிட்ட காலத்தினுள் பூர்த்தி செய்ய முடியாமல் போதல் மற்றும் ஆய்வுகளின் மூலம் சமூகத்திற்கு வழங்க வேண்டிய இறுதிப் பெறுபேறு குறிப்பிட்ட காலப் பகுதியில் குறிப்பிட்ட தரப்பினருக்கு செலுத்துவதற்கு முடியாமல் போயிருந்தது. | ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வுகளுக்காக ஆய்வு முன்மொழிவுகள் "ஆய்வுகள் மற்றும் பயிற்சிக் குழு (RTC)" இற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்தமையால், கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த பலவீனங்கள் ஏற்படுகின்றதென ஏற்றுக்கொள்கின்றேன். அதன்படி, 2026 ஆண்டு முதல் ஆய்வுத் திட்டங்கள் குழுவிற்கு (RTC) சமர்ப்பிக்கப்பட்டு, குழுவின் பரிந்துரையின் படி மீண்டும் தயாரிக்கப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்துவதற்கு இணங்குகின்றேன். | அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுத் திட்டங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் "தகவல்கள் மற்றும் தொடர்பாடல்கள்" செயற்திட்டத்தில் அடங்கிய மாநாடுகள், செயலமர்வுகள், சொற்பொழிவுகள் நடாத்துதல் மற்றும் நிறுவகம் வெளியீடுகள் சமர்ப்பித்தல் ஆகிய தொழிற்பாடுகள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் பௌதீக ரீதியாக 50 சதவீதத்தை மாத்திரம் நிறைவேற்றியிருந்தது. | வெளித் தரப்பினருக்கு அறிவினை பகிர்வதற்கான அமைப்பொன்றாகிய "Research Forum" மற்றும் மேலும், ஒரு மாநாடு மாத்திரம் நடாத்தியிருந்தது. அவ்வாறு வெளியீடுகளுக்கான முன்னேற்றம் குறைவடைவதற்கு 2023 | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி கருமங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டின் ஆய்வுகள் பூர்த்தி செய்யப்படாமை காரணமாகும். வெளியீடுகள் வெளியிடுவதற்கான தாமதம் அடைவதற்கு தகவல்கள் மற்றும் தொடர்பாடல் பிரிவின் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையும் காரணமாகும். | |
| (ஈ) | நிறுவகத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி பயற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் “விவசாய தொழில் முயலுனர் நிலை அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்” 04 மாவட்டங்களில் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்கள் என 26 நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூபா 1,400,000 தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன்படி, முதலாவது கட்டத்தின் கீழ் மொனராகலை மற்றும் கேகாலை இரண்டு மாவட்டங்களில் 20 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 1,200,000 தொகையும், இரண்டாம் கட்டத்தின் கீழ் பொலன்னறுவை மற்றும் மாத்தளை இரண்டு மாவட்டங்ளில் 06 நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூபா 200,000 தொகையும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, முதலாவது கட்டமாக கம்பஹா, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய 03 மாவட்டங்களில் ரூபா 980,000 தொகை செலவிடப்பட்டு 03 நிகழ்ச்சித் திட்டங்களும், இரண்டாம் கட்டத்தின் கீழ் ரூபா 190,000 தொகை செலவிடப்பட்டு மாத்தளை மாவட்டத்தில் 04 நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டிருந்தது. நிகழ்ச்சித் திட்டங்கள் தேவையான தொகுதிகளை இனங்காணாமல் மேற்கொள்ளப்படுவதனால் எதிர்பார்த்த இலக்குகளை நோக்கி நெருங்குவதற்கு முடியாமல் இருந்தது. மேலும், செயல் நடவடிக்கைத் திட்டத்தை திருத்துவதற்காக நடவடிக்கை எடுக்காமல், நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மாற்றப்பட்டிருந்தது. | விவசாய தொழில் முயலுனர் நிலை அபிவிருத்தி செய்தல் தொனிபொருளின் கீழ் 2024 ஆண்டிற்காக இரண்டாம் கட்டத்தில் 06 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அவற்றில் மாத்தளை மாவட்டத்திற்காக தேவைப்பாட்டின் அடிப்படையில் 04 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டது. எனினும், பொலன்னறுவை மாவட்டத்தில் 2023 ஆண்டு நடாத்தப்பட்ட முதலாம் கட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் நலன் பெறுவோர் இடையே இரண்டாம் கட்டத்திற்காக தொடர்புகொள்ளக்கூடிய தொழில் முயலுனர்களின் எண்ணிக்கை மிகவும் வரையறுக்கப்பட்டிருந்ததென இனங்காணப்பட்டது. நிகழ்ச்சித் திட்ட திட்டம் மற்றும் செலவு மதிப்பீடு திருத்தப்பட்டு அங்கீகாரம் பெறல் 2024 இறுதிக் காலாண்டில் மேற்கொள்ளப்பட்டதால், 2024 இன் திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்துவதற்கு முடியாமல் போனது. | நிறுவகத்தின் குறிக்கோள்களுக்கு பொருந்தக்கூடியவாறு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரித்து செயற்படுத்த வேண்டும். |